2013 மார்ச் 28]

மன்னார்குடியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிற இடங்களில் எல்லாம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அறிவியல் ஆராய்ச்சி நிலையம்போல் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் 100 ஏக்கர் விவசாய நிலமும், 50 கோடி ரூபாய் வரை நிதியும் தேவைப்படுகிறது. இதைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்து, தேவை இருப்பின், நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

சாலை வசதி

***162—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி சந்திப்பிலிருந்து தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டிக்கு நேரடி சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மணியாச்சி சந்திப்பிலிருந்து தூத்துக்குடி செல்வதற்கு 39 கிலோ மீட்டர் நீளத்தில் உள்ள சாலையும், மணியாச்சி சந்திப்பிலிருந்து திருநெல்வேலி செல்வதற்கு 27 கிலோ மீட்டர் சாலையும் மற்றும் மணியாச்சி சந்திப்பிலிருந்து கோவில்பட்டி செல்வதற்கு 47 கிலோ மீட்டர் சாலையும் போக்குவரத்துக்கு ஏற்றதாக நல்ல நிலையில் உள்ளன. அவை நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தாற்போல பால் வளம் மிக்க பகுதி தூத்துக்குடியாகும். தூத்துக்குடியிலிருந்து எண்ணற்ற வணிகர்களும், பொதுமக்களும் சென்னை மற்றும் பிற நகரங்களுக்கு தினந்தோறும் செல்கின்றனர். ஆனால், தற்போது தூத்துக்குடியிலிருந்து ஒரே ஒரு இரயில் மட்டுமே இயக்கப்படுகிறது. அதேசமயத்தில், திருவனந்தபுரம்—திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய பத்துக்கும் மேற்பட்ட இரயில்கள் மணியாச்சி வந்து செல்கின்றன. தூத்துக்குடியிலிருந்து மணியாச்சிக்கு தற்போது ஓட்டப்பிடாரம் குறுக்கு சாலை வழியாகச் செல்வதற்கு 47 கிலோ மீட்டர் ஆகிறது. மணியாச்சியிலிருந்து இரயில் பாதை ஓரத்தில் எண்ணற்ற அரசு நிலங்கள் இருக்கின்றன. அங்கு ஒரு பாதை அமைத்தால் 20 கிலோ மீட்டரில் தூத்துக்குடி சென்றடைய முடியும். அது ஒட்டுமொத்தமாக அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவிகரமாக இருக்கும். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒரு சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அம்மா

2013 மார்ச் 28]

அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில், பூவங்கோடு–ஆத்தூர் இணைப்புச் சாலை போக்குவரத்து நெரிசல் மிக்க குறுகிய ஒருவழிச் சாலையாகும். இந்தச் சாலை வழியாக ஏராளமான பேருந்துகள், கனரக வாகனங்கள், கல்லூரிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வந்து செல்வதால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தி, தரம் உயர்த்த நெடுஞ்சாலைத் துறை பிரேரணை அனுப்பியுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை அகலப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே வினாவைத் தொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில்கூட 168 கிலோ மீட்டர் இடைவழித்தடச் சாலைகள் இருவழித்தடச் சாலைகளாகவும், 1,000 கிலோ மீட்டர் ஒருவழித்தடச் சாலைகள், இடைவழித் தடங்களாகவும் தரம் உயர்த்தப்படும் எனக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையை*

ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அகலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

97—

வாய்க்கால் சீரமைப்பு

***7200—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதியிலுள்ள பூலா ஏரி வாய்க்காலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூலா ஏரியிலிருந்து கொண்டசமுத்திரம் ஏரிக்கு தண்ணீர் செல்லும் வரத்துக் கால்வாயை மேம்படுத்தும் திட்டத்திற்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 140 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுநாள் வரையில் 36 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் வரும் ஜுலை மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

முற்பகல் 10—40

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பினை மத்திய அரசிதழில்